**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 299/2022**

பெயர் : சசிக்குமார் (DW3) (Cross )

த/க/பெ. :

தேதி :10.02.2026

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய பிறந்த தேதி 20.08.1993. நான் வெளிநாட்டில் வேலை பார்த்தேன். 2023-2024 ம் ஆண்டுகளில் மற்றும் 2025 ம் ஆண்டில் பாதி வெளிநட்டில் இருந்தேன். என்னுடைய பாஸ் போட்டை பார்த்தால் இந்த் விபரம் தெரியும் என்றால் சரிதான். இங்கு விவசாயம் பார்கிறேன். முருகேசன் பைனான்ஸ் செய்கிறார் என்றால் சரிதான். அவரிடம் நான் கடன் வாங்கி உள்ளேன் என்றால் இல்லை. முதல் வாதி செல்லம்மாளை தெரியும். செல்லம்மாள் குன்னம் கிராமத்தில் வசிக்கிறார். கண்ணன் குன்னம் கிராமத்தில் வசிக்கிறார். 3, 10 பிரதிவாதிகள் எங்கள் ஊரில் வசித்து வருவதாக மட்டும் தவறாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்பது நினைவில்லை நான் வெளிநாட்டில் இருந்தேன். எத்தனை அயிட்ட சொத்தும் என்பதும் நினைவில்லை. சுமதி என்பவரை தெரியுமா என்றால் நினைவில்லை. சித்ரா, சங்கரி ஆகியோரை தெரியாது. 6 முதல் 10 பிரதிவாதிகளை தெரியாது. தாவா முதல் அயிட்ட சொத்து என்ன என்பது நினைவில்லை. முதல் அயிட்ட சொத்தில் என்ன உள்ளது என்றால் நினைவில்லை. வேலாயுதம் என்பவரை தெரியும். செல்லம்மாளின் கணவர் என்பதால் தெரியும் அவர் இறந்துவிட்டார். வேலாயுதம் இறந்து 40 ஆண்டுகள் ஆகிறது என்றால் அந்த விபரம் நினைவில்லை அவரை நான் நேரில் பார்த்ததாக நினைவில்லை. தாவா சொத்தில் வேலாயுதம் வீடு கட்டி வசித்து வந்து அவருக்கு பின்னர் குடும்ப மூத்தவர்எ ன்பதால் செல்லம்மாள் பெயரில் பட்டா கொடுத்த விபரம் தெரியுமா எ ன்றால்தெரியாது. செல்லம்மாளுக்கு எத்தனை வயது என்பது நினைவில்லை. செல்லம்மாளுக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். கைரேகை வைப்பார். அவர் வயதானவர் என்பதால் கண் பார்வை சரியாக தெரியாது என்றால் சரியல்ல. கொரோனா காலத்தில் செல்லம்மாள் உடல் நிலை சரியாக இருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் அந்த காலகட்டம் ஊரடங்கு என்பதால்

எனக்கு தெரியாது. 2020 ல் ஊரடங்கு போடப்பட்டது என்றால் நினைவில்லை. செல்லம்மாள் சரிதாவுக்கு பதிவு செய்து கொடுத்தார்கள் அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். கிரயம் பேசிய தேதி எனக்கு நினைவில்லை. கிரயம் எங்கு பேசினார்கள் என்பது நினைவில்லை. கிரய தொகை எவ்வளவு பேசினார்கள் என்பது தெரியுமா என்றால் 10 ஆயிரம் என்று சொன்னார்கள் மற்றபடி தெரியாது. பணம் கொடுத்தவிபரம் எனக்குதெரியும என்றால் அலுவலகத்தில் அவரை கேட்டபோது பணம் வாங்கி கொண்டதாக சொன்னார்கள். சார் பதிவகத்தில் நானே கேட்டேன் பணம் வாங்கி கொண்டதாக சொன்னார். பதிவு அலுவலகத்தில் கையெழுத்து போடும்போது கேட்டேன் எல்லாம் வாங்கி கொண்டதாக சொன்னார். சரிதா பணம் கொடுத்ததை நேரில் நான் பார்க்கவில்லை. செல்லம்மாள் மனோகர் அலுவலாகத்தில் ஆவணத்தை படித்து காட்டினார்கள் அதன்பின்னர் சார் பதிவகத்தில் கையெழுத்து போட்டார். படித்து காட்டிய இடத்திலும் பதிவு அலுவகத்திலும் கைரேகை தான் வைத்தார் கையெழுத்து போடவில்லை. பத்திரம் முருகேசன் தான் பத்திரம் தயார் செய்தார். எத்தனை முத்திரை தாளில் எழுதப்பட்டது என்பது நினைவில்லை. 4, 5 ஆண்டுகள் ஆகிறது. என்னை முருகேசன் தான் அழைத்தார். எந்த தேதியில் அழைத்தார் என்பது நினைவில்லை. 2020 ல் பதிவானது தெரியும். நான் இருசக்கர வாகனத்தில் தான் சென்றேன். தனியாக தான் சென்றேன். அவர்கள் எப்படி வந்தார்கள் என்பது தெரியாது. சரிதா, முருகேசன், செல்லம்மாள் அவர்களுக்குள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது நினைவில்லை. செல்லம்மாளை இன்சூரன்ஸ் எடுக்க வேண்டும் என்று முருகேசனும், சரிதாவும் பொய்யாக கூறி அழைத்து சென்றார்கள் என்றால் அவ்வாறு இல்லை. பொதுவாக வழிகாட்டி மதிப்பை விட சந்தை மதிப்பு கூடுதலாக இருக்கும் என்றால் அது பற்றி தெரியவில்லை நினைவில்லை. மனோகர் படித்து காட்டினார். பொதுவாக ஆவணத்தை படித்து காட்டி புரிந்துகொண்டு கையெழுத்துபோட்டார் என்று ஆவணத்தில் எழுதுவார்கள் என்றால் அது பற்றி நினைவில்லை. செல்லம்மாளுக்கு எத்தனை கையெழுத்து போட்டார்கள் என்றால் 5, 6 ஆண்டுகள் ஆனதால் நினைவில்லை. அவர் கைரேகை மட்டும் தான் வைப்பார். கையெழுத்து போட்டதாக நினைவில்லை. கைரேகை வாங்கியது மனோகர். பதிவு அலுவலகத்தில் ரிஜிஸ்டரில் வாங்கினார்கள். கிரய பத்திரத்தில் எந்த சர்வே எண் எழுதினாகள் என்றால் நினைவில்லை. கிரய ஆவணத்தில் வீட்டை பற்றி எழுதினார்களா என்பது

நினைவில்லை. அதில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. தாவா வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாமல் முருகேசன் மற்றும் சரிதாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. செல்லம்மாள் எழுத படிக்க தெரியாதவர் என்பதை பயன் படுத்தி நானும் 3, 10 பிரதிவாதிகளும் மோசடியாக கிரய ஆவணம் எழுதி பதிவு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. என் சாட்சியத்தை ஏற்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு வாதிகள், 1 முதல் 9 பிரதிவாதிகள் சேர்ந்து கட்டியது என்றால் நினைவில்லை. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் கிடைக்ககூடியது என்றால் தெரியாது.